| ஆவின் | நாமக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்.,<br>(பதிவு எண்: என்.எம்.ஆர்.180) *** GSTIN: 33AAEAN8010C1Z6<br>1 / 1167, பரமத்தி ரோடு, E B காலனி(அ), நாமக்கல்(வ&மா) PIN - 637 001.<br>Website: www.aavinmilk.com *** Email: aavinnmkl@gmail.com *** Phone: 04286-285512. |
|---|---|
| ந.க.எண். | 1069/Admin/NADP Vet Selection/2022 — தேதி: 30 .04.2022 |

# ஆவின் – நாமக்கல்

நாமக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் (ஆவின்) தற்போது 510 பிரதம சங்கங்களின் மூலம் தினசரி சராசரியாக 1,45,000 லிட்டர் பால் கொள்முதல் செய்து, பால் உற்பத்தியாளர்களுக்கு பணம் பட்டுவாடா செய்து வருகிறது.

தமிழக அரசு தற்போது பால் உற்பத்தியை அதிகரிக்கவும் கிராமப்புற விவசாயிகளின் கறவைகளுக்கு அனைத்து மருத்துவ வசதிகள் கிடைத்திடவும் அதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரம் வளம் பெற்றிடவும், முனைப்புடன் திட்டங்களை செயலாற்றி வருகின்றது. அதன்படி தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் மூலம் (NADP 2021–22) புதிய கால்நடை மருத்துவ வழித்தடங்கள் அமைக்கப்பெற்று தற்போது இருக்கும் கால்நடை மருத்துவர்களுடன் காலியாக உள்ள 3 கால்நடை மருத்துவ ஆலோசகர் பணியிடங்கள் இரண்டு மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிட, அரசின் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட திட்டத்தின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாக பணிபுரிய விருப்பமுள்ள கால்நடை மருத்துவ பட்டதாரிகள் தங்களை பற்றிய முழுமையான விவரங்களுடனும், உரிய பட்ட படிப்பு கால்நடை மருத்துவ கவுன்சில் சான்றிதழ்களுடனும் 11.05.2022 (புதன் கிழமை) அன்று நடைபெறும் நேரடி நியமன தேர்வில் கலந்து கொள்ள காலை 11 மணிக்கு பொதுமேலாளர், நாமக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட், E.B.Colony (அஞ்சல்),, பரமத்தி ரோடு, நாமக்கல் – 637 001 என்ற முகவரிக்கு அழைக்கப்படுகிறார்கள்.

30/4/22

பொது மேலாளர்

30/4/22 R. 30/4/22 M(Ad)
EO-C125